பொதுவான ஊழியப் பதிவேடுகள்

*393 வினா—திரு கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி, தனியார் பள்ளி ஆகியவைகளில் வேலை செய்யும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு பொதுவான "சர்வீஸ் ரிஜிஸ்டர்" வைப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏதேனும் உத்திரவிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

பேறுகால விடுப்பு.

*394 வினா—திரு கொ. இரா. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பல்வேறு நிர்வாகங்களில் பணியாற்றும் ஆசிரியைகள் அனைவருக்கும் மூன்று மாத பிரசவ விடுப்பு அளிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Secondary School Leaving Examinations

* 395 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government propose to abolish the conduct of examinations of the Secondary School-Leaving stage ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Central Government are proposing to abolish the Secondary School-Leaving Certificate Examination and whether they have sent such a proposal to the Madras Government and if so, what is the reaction of this Government ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, பள்ளி இறுதித் தேர்வுகளை நிறுத்திவிடவேண்டும் என்று எந்தக் கட்டளையும் பிறப்பிக்கவில்லை. கல்விக் குழு ஒருவிதமாகச் சிபார்சு செய்திருக்கிறது. ஆண்டுதோறும் அவர்களுக்கு பரீட்சை வைத்து, அதன் மூலம் வருகின்ற எண்களையும் உள்ளடக்கிக்கொண்டு தேர்வு நடத்தலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கும்படியாகக் கூறியிருக்கிறது. அதுபற்றி இரு தரப்பான கருத்துக்கள் இருக்கின்றன. ஐம்பது எண்களை, ஆண்டு பூராவும் அவ்வப்போது வைக்கின்ற தேர்வுகளின் மூலமாகப் பெறும் திறமையைக் கணக்கிட்டும், பிறகு பொதுவாக எழுதப்படுகிற தேர்வின் மூலமாகக் கிடைக்கின்ற ஐம்பது எண்களையும் கூட்டி, ஒரு விதத்திலே அவர்களுடைய திறமையைப் பரிசோதிக்கலாம் என்ற கருத்து இருந்து வருகிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை.

திரு. கே. விநாயகம் : ஆண்டு முழுவதும் இந்த மாணவர்களுடைய திறமையைச் சோதிப்பதற்கு வேண்டிய பரீட்சைகள் வைப்பதைவிட, ஆண்டு இறுதியில் முழுப் பரீட்சை இருக்கிறது என்ற பயம் மனதிற்கு இருந்து, அதை முன்னிட்டு அவர்கள் நன்கு படித்து முன்னேறுவதற்கு வேண்டிய வகையை இந்தப் பரீட்சைகள் செய்யும். ஆதலாலே, எந்தக் காரணத்தை யொட்டி மத்திய அரசு சிபார்சு செய்தாலும், அல்லது இந்தக் கல்விக